**தணிப்பு நடவடிக்கைகள் மூலம் நிலப் பாதிப்பை குறைத்தல் செயற்திட்டம் - 2020**

தணிப்பு நடவடிக்கைகள் மூலம் நிலப் பாதிப்பை குறைத்தல் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 ஏப்ரல் 25 ஆம் திகதிய எல் 0124 ஏ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் II ஆ (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. பௌதீக ரீதியான தணிப்பு நடவடிக்கைகளை அமுல்படுத்துவதன் மூலம் மண்சரிவுகளால் ஏற்படும் இடர் மற்றும் சேதத்தை குறைத்து மண்சரிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் பிரமாணங்களை மேம்படுத்துதல் இச் செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 19,976 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 110 மில்லியனானதுடன் அதில் ரூபா 14,528 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 80 மில்லியன் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 யூலை 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2023 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற

அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான கடப்பாட்டுக் கட்டணங்கள் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | 37,019,009 | கணக்காய்வாளர்களுடன் இணங்கப்பட்டது. | கடப்பாட்டுக் கட்டணங்கள் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டின் போது கடனிலிருந்து கழிக்கப்பட்ட மூலதனமாக்கப்பட்ட வட்டிக் கட்டணங்கள் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | 3,616,038 | கணக்காய்வாளர்களுடன் இணங்கப்பட்டது. | வட்டிக் கட்டணங்கள் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட வேண்டும். |
| (இ) | மொத்த ஆலோசனைக் கட்டணத்தில் ஏறத்தாழ 21 சதவீதமான மீளாய்வாண்டிற்கான மொழிபெயர்ப்புக் கட்டணம் நிதிக்கூற்றுக்களில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 1,830,860 | பதில் வழங்கப்படவில்லை. | ஆலோசனைக் கட்டணங்கள் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 2.2 விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் - இல. 756 | 2020 இற்குரிய நிலையான சொத்துக்கள் தொடர்பான மெய்மையாய்வு அறிக்கைகள் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்வை மேற்கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகளை நாங்கள் மேற்கொள்வோம். | நிதிப்பிரமாணங்களில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் நிதி முகாமைத்துவ கையேட்டின் II ஆம் | கணக்காய்வு நடாத்தப்பட்ட திகதியான 2021 மார்ச் 31 வரையிலும் நிதி முகாமைத்துவ | முழு நேர செயற்திட்டக் கணக்காளர் 2021 மே மாதத்தில் | செயற்திட்டத்தின் நிதி முகாமைத்துவ கையேட்டில் வழங்கப்பட்டுள்ள |

| | | | | |
|---|---|---|---|---|
| | அத்தியாயத்தின் 2.2 ஆம் பந்தி | கையேட்டின் பிரகாரம் முழுநேரத் தகைமையுள்ள செயற்திட்டக் கணக்காளர் ஒருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆட்சேர்ப்பு செய்யப்பட்டார். | அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்டத்தின் நிதி முகாமைத்துவ கையேட்டின் VII ஆம் அத்தியாயம் | பிஎம்யூ இற்காக தனியான உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வு நடாத்தப்பட்ட திகதியான 2021 மார்ச் 31 வரையிலும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதி கையேட்டில் உள்ளக கணக்காய்வாளர் பதவிநிலை குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் எம்எஸ்டி இதற்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு அங்கீகரித்திருக்கக்க வில்லை. | உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம்**

செயற்திட்டத்தின் செயற்பாடுகள் பின்வரும் பெயர்களிலான 04 கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றன.

(அ) தணிப்பு நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துதல்
(ஆ) கொள்கை, நியமங்கள் மற்றும் நிறுவகரீதியான இயலளவை மேம்படுத்துதல்
(இ) அத்தியாவசிய வசதிகளை வழங்குதல் மற்றும்
(ஈ) உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்ப ஆதரவு மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம்

| இல. | கூறுகள் | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | கூறு – 01 | 147 முன்னுரிமைத் தளங்களின் கள பரீட்சிப்புக்கள், விரிவான வடிவமைப்பு, நிர்மாணம் மற்றும் மேற்பார்வை முகாமைத்துவம் ஆகியவற்றிற்காக செயற்திட்டத்தின் முதலாவது கூறின் கீழ் ஐ.அ.டொலர் 97 மில்லியன் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஐ.அ.டொலர் 1.50 மில்லியன் பெறுமதியான 04 வேலை ஒப்பந்த பொதிகளின் கீழ் 27 தளங்களில் சிவில் வேலைகள் தொகுக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் போது ஐ.அ.டொலர் 5.2 மில்லியன் பெறுமதியான 02 வேலை ஒப்பந்தங்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன. | 2020 ஆம் ஆண்டில் கொவிட் 19 தொற்றுநோய் மற்றும் 2019 ஏப்ரல் 21 இல் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் என்பன காரணமாக மிகுதி பொதிகளின் பெறுகை தாமதமடைந்திருந்தது. | காலதாமதங்களை தடுப்பதற்கும் மேலதிக கிரயத்தை தவிர்ப்பதற்கு ஒப்பந்த வேலைகள் உரிய காலத்தில் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | | கட்டம்-2 இன் கீழ் ஐ.அ.டொலர் 64.3 மில்லியன் பெறுமதியான 08 வேலை ஒப்பந்தங்களின் கீழ் 120 தளங்களின் மிகுதி சிவில் வேலைகள் தொகுக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் போது எந்தவொரு ஒப்பந்தமும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | மோசமான வானிலை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக செயற்திட்ட செயற்பாடுகளை அமுல்ப்படுத்துதல் மற்றும் ஒப்பந்தங்களை வழங்குதல் என்பன தாமதமடைந்திருந்தன. | காலதாமதங்களை தடுப்பதற்கும் மேலதிக கிரயத்தை தவிர்ப்பதற்கு ஒப்பந்த வேலைகள் உரிய காலத்தில் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கூறு - 02 | இக் கூறின் கீழ் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ஐ.அ.டொலர் 3.0 மில்லியன் பெறுமதியான 03 ஆலோசனை ஒப்பந்தங்கள் விளம்பரப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டிலும் அந்த ஆலோசனை ஒப்பந்தங்கள் விளம்பரப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது இலங்கையில் பரவிய கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக இச் செயற்பாடு பிற்போடப்பட்டது. | செயற்திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கிக் கடன் மற்றும் அரசாங்கத்தின் பங்களிப்பு பெறுவனவிலிருந்து முறையே ரூபா 5,670.80 மில்லியன் மற்றும் ரூபா 2,016 மில்லியன் தொகைகளாக முன்னைய ஆண்டின் இறுதியில் விரிவான இலக்கு கிரய மதிப்பீடு காணப்பட்டது. எவ்வாறாயினும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2.57 சதவீதம் மற்றும் 11.35 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முறையே ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கிக் கடனிலிருந்து ரூபா 145.47 மில்லியன் தொகையும், அரசாங்க நிதியிலிருந்து ரூபா 228.84 மில்லியன் தொகையுமான மொத்த நிதி பயன்பாடு காணப்பட்டது. | இலங்கையில் பரவிய கொவிட் 19 நோய் காரணமாக இலக்கிடப்பட்ட வேலைகளை மேற்கொள்வது மிகவும் கடினமானதாக இருந்ததுடன் இது களப் பணிகள், கேள்வி கோருதல், மதிப்பீட்டு பணிகள் என்பவற்றை உரிய நேரத்தில் செய்வதை பாதித்திருந்தது. | செயற்திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 மனித வள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய விடயங்கள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கு தேவையான 41 பதவியணியினரிற்கான 23 பதவிநிலைகளை நிரப்புவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 23 வெற்றிடங்கள் (15 பதவிநிலைகளிற்கான) 2020 திசெம்பர் 31 வரையிலும் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் சில வெற்றிடங்கள் நிரப்பப்பட்டது, சில பதவிகள் NBRO ஊழியரின் பகுதி நேர நியமனம் மூலம் நிரப்பப்பட்டது. | செயற்திட்டத்தின் சுமூகமான செயற்பாட்டைத் தொடர்வதற்கு சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் பதவியணி உறுப்பினர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | அந்த 23 இல் 15 வெற்றிடங்கள் 11 முகாமைத்துவ மட்ட பதவிநிலைகளுக்காக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | 2020 ஆம் ஆண்டில் சில வெற்றிடங்கள் நிரப்பப்பட்டது, சில பதவிகள் NBRO ஊழியரின் பகுதி நேர நியமனம் மூலம் நிரப்பப்பட்டது. | செயற்திட்டத்தின் சுமூகமான செயற்பாட்டைத் தொடர்வதற்கு சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் பதவியணி உறுப்பினர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட வேண்டும். |